II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 127 of 2024**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 24.03.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : வினய் சோலங்கி | Age | : |
| Father's / Husband's Name | : | Village | : |
| Taluk | : | Distict | : |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>

எனது தாயார் பெயர் வசந்தா பாய். அவர் வா.சா.ஆ.1 மூலமாக ஒரு வாடகை பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ன் படி 15 ஆண்டுகள் குத்தகை காலமாக குறிப்பிடப்பட்டுள்ளது. 21.09.2000 முதல் 15 ஆண்டுகள் குத்தசை காலமாகும். அது 20.09.2015 உடன் முடிகிறது. பிரதிவாதிக்கு இது குறித்து அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். அந்த அறிவிப்பின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். முதலில் எனது தந்தையும் பின்னர் நானும் ஆக சுமார் 34 வருடம் பிரதிவாதியான இந்தியன் ஆயில் கார்பரேஷனின் டீலராக இருந்தோம். எந்த வருடத்தில் என்னை டீலர் ஷிப்பில் இருந்து நீக்கினார்கள் என்றால் 2013 – 2014 ல் நீக்கினார்கள். அவ்வாறு நீக்கியதற்காக அறிவிப்பையோ டீலர்ஷிப் ஒப்பந்தத்தையோ இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்திருக்கிறேன். இந்தியன் ஆயில் கார்பரேஷனின் டீலராக இருக்க சொந்தமாக நிலம் இருக்க வேண்டும் அல்லது குத்தகை நிலம் இருக்க வேண்டும் என்றால் எனக்கு தெரியாது.

எனக்கு நிலம் எனது தாயார் மூலமாகவும், டீலர்ஷிப் எனது தந்தை மூலமாகவும் வந்தது. நான் நேரடியாக பங்க்கை நடத்தினேனா என்றால் ஆம். பெட்ரோல் விற்பனைக்கு எவ்வளவு கமிஷன் தொகை என்றால் ஒரு லிட்டருக்கு சுமாராக 75 பைசா முதல் ஒரு ரூபாய் வரை கமிஷன் வழங்கப்பட்டது. எனக்கு பிரதிவாதியிடம் இருந்து வரவேண்டிய கமிஷன் நிலுவை தொகை ஏதேனும் உள்ளதா என்றால் அது மாதிரி ஒரு வழக்கம் இல்லை. ஆயில் கார்பேரஷனிடம் இருந்து பெறப்படும் பெட்ரோலுக்கு கமிஷன் தொகை சேர்த்து தான் விற்பனை செய்யப்படும். ஆயில் கார்பேரஷன் தொகை எதுவும் கொடுப்பதில்லை. நான் பிரதிவாதி மீது 2011ம் ஆண்டு மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் வாடகை பாக்கிக்காகவும் அத்துமீறி எனது இடத்தில் நுழைந்ததற்காகவும் வழக்கு போட்டேன். இந்த விவரத்தை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். ( சாட்சியிடம் வழக்குரையை காட்டி பிரதிவாதி வழக்கறிஞர் கேட்டபோது சாட்சி 2011 ம் ஆண்டு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கை பற்றி இந்த வழக்குரையில் குறிப்பிடவில்லை என்று சொல்கிறார்) நான் பூந்தமல்லி சார்பு நீதிமன்றத்தில் 2014ம் ஆண்டு ஒரு வழக்கை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் சேதத்திற்கான இழப்பீடு மற்றும் வாடகை பாக்கி கோரியிருந்தேன். 2018ல் அந்த வழக்கு எனக்கு ஆதரவாக தீர்ப்பானது. அதற்கு பிறகு பிரதிவாதிகள் எனக்கு பணம் கொடுத்தார்கள் என்றால் அந்த தீர்ப்பின் படி பணம் கொடுக்கவில்லை. அதனால் நான் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்தேன். பிரதிவாதி எனக்கு சேரவேண்டி பணத்தை கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. தீர்ப்பாணையை நிறைவேற்ற கோரி சார்பு நீதிமன்றத்தில் நான் நிறைவேற்று மனு தாக்கல் செய்தேன் என்றால்

சரிதான். அதன் படி எனக்கு வழக்கு சொத்து ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். சார்பு நீதிமன்ற வழக்கில் ஜனவரி 2011ல் இருந்து 39 மாதங்களுக்கு எனக்கு பிரதிவாதி ரூ.1,68,480/- வாடகை பாக்கியாக கொடுக்கவேண்டும் என்று தீர்ப்பானது என்றால் சரிதான். அனால் அதன் படி பிரதிவாதி பணம் கொடுக்கவில்லை.

(இந்நிலையில் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்டுகறிது)